பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

STAFF COPY
NOT FOR SALE

# உதயன்

விலை ரூபா 3·50

சுடர் 5 பிரமோதூத ஹு ஆவணி ம 11 உ செவ்வாய்க்கிழமை (28-08-1990) ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 07 கதிர்: 178

# மண்டைதீவு மோதலில் 49 புலிகள் வீரமரணம்!

## வற்றாப்பளை: ஹெலி தாக்கி சிறுவன் மரணம்

நேற்று முன்தினம் வற்றாப்பளைப் பகுதியில் ஹெலிக்கொப்டரில் இருந்து நடத்தப்பட்ட தாக்குதலில் ஆரியராசா அகதியான் (வயது 11) என்ற சிறுவன் உயிரிழந்தான்.

உயிரிழந்த சிறுவனின் சகோதரனான ஆரியராசா துஷ்யந்தனும் (வயது 4), இமானுவேல் டொமினிக் யோசப் [வயது 36] என்ற மற்றொருவரும் இந்தச் சம்பவத்தில் படுகாயமுற்றனர். [உ]

## 75 நாள் கோட்டை முற்றுகைக்கு நூறு புலிகள் உயிர்த் தியாகம்

யாழ்ப்பாணம், ஆக. 28

யாழ். கோட்டை இராணுவ முகாமை முற்றுகைக்குள் வைத்து அதை வெற்றி கொள்வதற்கு உதவியாக மண்டைதீவுப் பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா படையினருக்கும் இடையில் கடந்த 24, 25 ஆம் திகதிகளில் நடைபெற்ற சண்டையில் 49 புலிகள் வீரமரணமடைந்துள்ளனர்.

இவர்களையும் சேர்த்து, கடந்த 75 நாட்களாக யாழ் கோட்டை இராணுவ முகாமை வெற்றிகொள்வதற்காக நடந்த போரில் மொத்தம் நூறு புலிகளின் உயிர்கள் விலையாகச் செலுத்தப்பட்டுள்ளன.

—இவ்வாறு விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டிருப்பதாவது:-

வரலாற்று ரீதியாகவே யாழ் கோட்டை முகாமானது எமது மண்ணை ஆக்கிரமித்த அந்நியப் படைகளின் கூடாரமாகவே செயற்பட்டு வந்திருக்கின்றது.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், இந்தியர்கள், சிங்களவர் என்று காலத்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## மண்டைதீவில் இராணுவம்
## பணய கைதிகளை கொண்டு பாலம் அமைக்க முயற்சி

யாழ்ப்பாணம், ஆக. 28

மண்டைதீவுக்கு முன்னேறிய இராணுவத்தினர், வழியில் பணயக் கைதிகளாகத் தங்களுடன் பிடித்துச் சென்ற அப்பாவிப் பொதுமக்களைக் கொண்டு பாலம் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

இவர்களைக் கொண்டு அப்பகுதியில் இருக்கும் நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் முயற்சியிலும் படையினர் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அதனை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

பொது இடங்களில் தஞ்சம் புகுந்திருந்த அப்பாவி மக்களே பெரும்பாலும் படையினரால் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டனர் என்பதும் - அவர்களைக் கேடயமாகக் கொண்டு படையினர் முன்னேற முயற்சிப்பதும் குறிப்பிடத் தக்கதாகும். (உ)

## ராணுவ நடவடிக்கைகளை நிறுத்த வி. பி. சிங் மீண்டும் வலியுறுத்து

புதுடில்லி, ஆக. 28

இலங்கை அரசாங்கம் உடனடியாக இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தவேண்டும் என இந்தியப் பிரதமர் வி. பி. சிங் நேற்று வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார்

இந்த விடயம்குறித்து திரு. வி. பி. சிங் தனிப்பட்ட முறையில் முதல்தடவையாக நேற்று அறிக்கை ஒன்றை புதுடில்லியில் விடுத்திருக்கிறார்.

இலங்கை அரசு உடனடியாக பகைமைப் போக்கை நிறுத்திவிட்டு பேச்சுவார்த்தைகளைத் தொடங்கவேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

இலங்கையின் ஒற்றுமை, ஒருமைப்பாடு ஆகியவற்றின் வரம்புக்குள் தமிழர்களின் சட்டபூர்வமான அபிலாசைகளைப் பேச்சுவார்த்தை மூலம் அடையவேண்டும் என்று குறிப்பிட்ட அவர்—

கடந்த சில நாட்களாக அந்தத் தீவில் அதிகரித்துவரும் சண்டை குறித்துக் கவலை

[4 ஆம் பக்கம் பார்க்க]

## கூட்டிச் செல்லப்பட்டோர் சுட்டுக் கொல்லப்பட்டனர்?

யாழ்ப்பாணம், ஆக. 28

ஊர்காவற்றுறையில் இருந்து அல்லைப்பிட்டி வரை வந்த இராணுவத்தினரால் வழியில் கைது செய்யப்பட்டு கூட்டிச் செல்லப்பட்டவர்களில் சிலர் பின்னர் சுட்டுக் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

படையினரால் கூட்டிச் செல்லப்பட்டவர்களில் சிலரின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக நேற்று முன்தினம் நள்ளிரவு அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர். (உ-3)

## குருநகரில் வீரமரணம்

யாழ்ப்பாணம், ஆக. 28

அல்லைப்பிட்டியிலுள்ள இராணுவத்தினர் மேற்கொண்ட ஆட்லறி ஷெல் குருநகர்ப் பகுதியில் விழுந்து வெடித்ததில் நாவாந்துறையைச் சேர்ந்த இளம்புலி சாம்சன் [செல்லப்பா குலேந்திரன்] வீரமரணமடைந்தார். [ஒ]

## 11 வீடுகள் தீக்கிரை

யாழ்ப்பாணம், ஆக. 28

கடந்த சனிக்கிழமையன்று வவுனியா செட்டிகுளம் ரயில் நிலையப் பகுதியில் தமிழருக்குச் சொந்தமான 11 வீடுகளும் உப தபால் நிலையம் ஒன்றும் படையினரால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.

தனபால், சுலைமான், முத்துராஜா, நேசன், தருமு, சிவந்தார், மகேஸ்வரன், இரத்தினம் ஆகியோரின் வீடுகளே எரிக்கப்பட்டன. (உ)

## பலாலியில் முன்னேற முயன்ற படை இழப்புகளுடன் முகாம் திரும்பியது

### நேரடி மோதலில் மேஜர் செல்வராஜா வீரமரணம்

யாழ்ப்பாணம், ஆக. 28

நேற்றுக் காலை 6.30 மணிக்கு பலாலி இராணுவ முகாமிலிருந்து வயாவிளான் கட்டுவன் பகுதிகளை நோக்கி முன்னேற முயன்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதல்களை அடுத்து இராணுவத்தினர் பலத்த இழப்புகளுடன் முகாமுக்குப் பின்வாங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்தினர் முன்னேற முயற்சித்த போது அவர்களுக்கு உதவியாக விமானப்படையின் அவ்ரோ, பொம்மர்கள் மற்றும் ஹெலிகளில் இருந்து வான் தாக்குதலும் கடுமையாக நடத்தப்பட்டது.

எனினும் விடுதலைப் புலிகள் இந்தத் தாக்குதலை தீரத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லையில் கடும் மோதல்; 3 போராளிகள் வீரமரணம்

யாழ்ப்பாணம், ஆக. 28

முல்லைத்தீவு முகாமுக்கு வெளியே ஹெலிக்கொப்டர்கள் மூலம் தரையிறங்கிய படையினரை விடுதலைப் புலிகள் சுற்றிவளைத்துதாக்கி வருகின்றனர்.

இந்த மோதல் சம்பவத்தின் போது தங்கத்துரை (கந்தசாமி செல்வராஜா - இரத்தினபுரி) அருளப்பு (ஜெயரட்ணம் - கரவெட்டி), முகுந்தன் (குணசேகரம் யோகராஜா - நெடுந்தீவு) ஆகிய மூன்று போராளிகள் வீரமரணம்அடைந்தனர். (உ)

## மக்களை மிரட்டும் பாணியில் வானில் 8 பொம்மர்கள் பவனி

யாழ்ப்பாணம், ஆக. 28

பலாலிப் பக்கமாக இருந்து நேற்று மாலை 4.45 மணியளவில் வானில் அடுத்தடுத்து வரிசையாக - ஒரே சீரான வேகத்தில் - 8 பொம்மர்கள் யாழ். நகருக்கு மேலே பறந்து வட்டமிட்டன.

யாழ் நகரை இரு தடவைகள் வலம் வந்த பொம்மர்கள், மூன்றாவது தடவையில் மூர்க்கத்தனத்தைக் காட்டத் தொடங்கின.

பார்வைக்கு மாதிரி காட்டும் (Display) பாணியில் நகரை நோக்கி வந்த பொம்மர்களை மக்கள் பார்த்து அதிசயித்தபடி, செய்வதறியாது நின்றனர். இரண்டா... [illegible]

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் 29 தமிழரை ராணுவம் சுட்டுக் கொன்றது

கிழக்கில் 29 தமிழர் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை களுவாஞ்சிக்குடியில் 16 பேரும் சனிக்கிழமை பெரிய கல்லாறில் 5 பேரும், கோட்டைக்கல்லாறில் 2 பேரும், ஒந்தாச்சிமடத்தில் 6 பேருமாக 29 பேர் கொல்லப்பட்டனர். [ஒ]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

க. சச்சிதானந்தம் F- 757623, ச. சரஸ்வதி F- 757624, ச. கோணேஸ்வரன் F- 757625, இலக்கங்கள் கொண்ட உணவு முத்திரைகளும், 231680764 X இலக்கமுடைய அடையாள அட்டையும் தவறிவிட்டது. எடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (14103)

# ஸ்ரீமா தலைமையில் 20 அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் ஜனாதிபதியைச் சந்திக்க முடிவு

## வடக்கு-கிழக்கில் மோதலை நிறுத்த முயற்சி

கொழும்பு ஆக. 28

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் தொடர்ந்து நடந்து வரும் மோதல்களை நிறுத்துவது பற்றி ஜனாதிபதி பிரேமதாஸாவைச் சந்தித்துப் பேசுவது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உட்பட 20 அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இத்தூதுக்குழுவுக்கு எதிர்க் கட்சித் தலைவியும், சுதந்திரக் கட்சித் தலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயாக்கா தலைமை வகிப்பார் என்றும் முடிவாகியது.

ரெலோ இயக்கம் சார்பில் திரு. கருணாகரன், திரு. சிவாஜிலிங்கம், திரு. ஸ்ரீகாந்தா ஆகியோர் ஒழுங்கு செய்த இக் கூட்டம் கடந்த ஞாயிறு காலை கொழும்பு தாஜ்ஹோட்டலில் நடைபெற்றது.

அக் கூட்டத்தில் பின்வரும் கோரிக்கைகளை அரசுக்கு விடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

★ யாழ். குடாநாட்டில் நடத்தப்படும் கண்மூடித்தனமான விமானக் குண்டுத்தாக்குதல்களை உடனடியாக நிறுத்த வேண்டும்.

★ பிரச்சினைக்குத் தீர்வு காண பேச்சுவார்த்தைகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும்.

★ வடமாகாணத்தில் நிலவும் உணவுப் பொருள் தட்டுப்பாட்டை நீக்க உடனடியாக பத்தாயிரம் மெட்ரிக் தொன் உணவுப் பொருள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை விமான மூலம் போட ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும்.

★ கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரண வேலைகளைத் துரிதப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இக் கூட்டத்தில் நான்கு அரசியல் கட்சிகள் கலந்து கொள்ளவில்லை என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (இ-எ)

## இலங்கைக்கு மேல் சூரியன்

கொழும்பு, ஆக. 28

இன்று செவ்வாய் முதல் அடுத்தம் மாதம் 8ஆம்திகதி வரை இலங்கைக்கு மேலாக சூரியன் சஞ்சாரம் செய்யும். [இ-எ]

## தற்பாதுகாப்பு பயிற்சி

கொடிகாமம், ஆக. 28

கொடிகாமம் கச்சாய் அல்லாரை, தவசிகுளம் பகுதி பொது மக்களுக்கு தற்பாதுகாப்புப் பயிற்சி அளிக்கப்பட்டுவருகிறது. (இ-75)

## அயடின் கலந்த உப்பு பாவனைக்கு சட்டம் வரும்

கொழும்பு, ஆக. 28

அயடின் கலந்த உப்பை விற்க நிர்ப்பந்திக்கும் சட்டம் கொண்டு வரப்பட உள்ளது.

அயடின் சத்து இல்லாத உப்பு பாவனையால் கண்டமாலை நோய் பரவுவது அதிகரித்து வருவதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. (இ-எ)

## இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு இந்திய அரசு ரூ. 4 கோடி

சென்னை, ஆக. 28

இலங்கைத் தமிழ் அகதிகளை பராமரிப்பதற்கு புதுடில்லி அரசு, தமிழக அரசுக்கு 4 கோடி ரூபா வழங்கி உள்ளது.

முதலமைச்சர் கருணாநிதி தமிழக சட்டசபையில் இதனைத் தெரிவித்தார்.

அகதிகள் மறுவாழ்வுப் பணிகளுக்காகப் புதுடில்லியிடம் மாநில அரசு பத்து கோடி ரூபா நிதி கோரியிருந்ததாகவும் திரு. கருணாநிதி கூறினார். [இ-எ

## இடம்பெயர்வு

யாழ்ப்பாணம், ஆக. 28

சரவணை, நாரந்தனை, கரம்பொன், புளியங்கூடல் பகுதியைச் சேர்ந்த மக்கள் பலர் சமீபத்திய இராணுவ நடவடிக்கைகள் காரணமாக சுருவில், புங்குடுதீவுப் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்துள்ளனர். [இ-113

# மரண அறிவித்தல்கள்

## ஐயாத்துரை பரிமளம்

வட்டு மேற்கு கண்ணகை அம்மன் கோவிலடியைச் சேர்ந்த ஐயாத்துரை பரிமளம் அவர்கள் ஞாயிற்றுக்கிழமை 26-08-90 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் ஐயாத்துரை அவர்களின் அன்பு மனைவியும், புஸ்பவதி, ஸ்ரீரங்கம் (மலேரியா தடுப்பு இயக்கம் யாழ்ப்பாணம்), ஸ்ரீ ஞானதாசன் (யாழ். பல்கலைக் கழகம்), பாலச்சந்திரன் (பட்டின சபை, பிரதேச சபை கரைச்சி), கமலநாயகி, ஸ்ரீ சற்குணநாதன் (கச்சேரி மன்னார்), தேவானந்தன் (ஆசிரியர் கொழும்பு) ஆகியோரின் அன்புத்தாயாரும், காலம் சென்ற பூபாலசிங்கம், குணபூசணி, ஸ்ரீதேவி கோகுலவரதராணி, சாரதாதேவி, அற்புதசாந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் (26-08-90) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் கொத்தைத்துறை மயானத்தில் நடைபெற்றது. என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

ஐயாத்துரை.

வட்டுக்கோட்டை. [14104]

## மு. நாகலிங்கம் ஜே. பி.

[இளைப்பாறிய கல்வி அதிகாரி]

சுழிபுரத்தைப் பிறந்த இடமாகவும் திருநெல்வேலியை வசித்த இடமாகவும் கொண்ட முருகேசு நாகலிங்கம் அவர்கள் 26-08-90இல் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் மனோன்மணியின் அன்புக் கணவரும் பத்மாவதி, கமலாவதி, என். பத்மநாதன் (உதவி அதிபர் மானிப்பாய் இந்துக் கல்லூரி), இந்திராவதி, கமலநாதன் (பிரான்ஸ்), சோதிநாதன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆர். கே. சுப்பிரமணியம் (உதவி இயக்குநர் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் இரத்தினபுரி), க. முத்தையா (சிறு கைத்தொழிற் திணைக்களம் யாழ்ப்பாணம்), ப. சந்திராதேவி (ஆசிரியை பளை மகா வித்தியாலயம், க. செல்வரட்ணம் (நில அளவையாளர் - நாகலிங்கம் இன்ஸ்ரிரியூட் நிர்வாகி), ஜெயராணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவநேசன் (ஆசிரியர் மெமோரியல் ஆங்கிலப் பாடசாலை மானிப்பாய்), பத்மராணி, அருள்மொழித்தேவன் (பிரான்ஸ்), கருணைராஜன் (பிரான்ஸ்), வசந்தி (ஆசிரியை சுழிபுரம் ஐ. ச. சை. வி.), சாந்தி, ஜெயந்தி, செல்வப் பிரியா, செல்வப்பிரபா, செல்வபாரதி ஆகியோரின் பேரனாரும், சிவதர்சினி, சிவதாரணியின் பூட்டனாரும் ஆவார். அன்னாரின் ஈமைக் கிரியைகள் 27-08 90 அன்று திருவடிநிலை மயானத்தில் நடைபெற்றது.

தகவல்:

மனைவி, பிள்ளைகள்.

வீரபத்திரர் கோயிலடி,
சுழிபுரம் கிழக்கு. [13923]

# தமிழருக்கு வழங்க ஒன்றும் இல்லை; சூட்டுக்கு சூடு தான் கொடுக்கலாம்

## அரசாங்கத் தரப்பினர் கருத்து இதுவாம்

பி. பி. சியின் '24 மணி நேரம்' நிகழ்ச்சியில், நேற்றுக்காலை கொழும்பில் உள்ள பி. பி. சி. செய்தியாளர் கிறிஸ்தொபர் மொரிஸை, லண்டன் பி. பி. சி செய்திப் பிரிவு பேட்டி கண்டது. அதன் விவரம் இங்கு தரப்பட்டுள்ளது.

கேள்வி: விமானத் தாக்குதலை நிறுத்தும்படி எதிர்க் கட்சிகள் விடுத்த கோரிக்கை மீது அரசு எந்த அளவில் நடவடிக்கை எடுக்க இருப்பதாகக் கருதுகிறீர்கள்?

மொரிஸ்: விடுதலைப் புலிகளின் நிலைகள் மீதுதான் விமானப்படை குண்டு வீச்சுக்களை நடத்துவதாக அரசு கூறுகிறது. இன்னும் சில தினங்களில் புலிகளின் முற்றுகையில் உள்ள யாழ். கோட்டை முகாமை மீட்க முடியும் என்று அரசு நம்புகிறது.

மக்கள் நெருக்கமாகக் குடியிருக்கும் பகுதிகளில் உள்ள விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தும் போது பொது மக்கள் தான் உயிரிழக்கின்றனர் என்பது தான் எதிர்க் கட்சியினரின் முக்கிய குற்றச்சாட்டு.

கேள்வி: சிவிலியன்கள் கொல்லப்படுகிறார்கள் என்பதை அரசு ஏற்றுக்கொள்கிறதா?

மொரிஸ்: சிவிலியன்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்று மேலெழுந்தவாரியாக அரசு தரப்பினர் கூறுகின்றனர்.

கேள்வி: இந்த மோதலில் சிவிலியன்கள் உயிரிழந்தனர் என்பது பற்றி உங்களுக்கு ஏதும் தெரியுமா?

மொரிஸ்: கடந்த வாரம் மட்டும் 300 பொது மக்கள் வரையில் கொல்லப்பட்டனர் என்று விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

தமிழ்ப் பகுதிகளுடன் தொடர்பு வைத்துள்ள ஏனைய தமிழ்க் குழுக்களும் தமிழ்ப் பகுதிகளில் இருந்து வெளியேறி வருபவர்களும் விமானத் தாக்குதலில் ஏராளமானோர் உயிரிழந்தனர் என்று கூறுகிறார்கள் யாழ். மாவட்டத்தில் 5 லட்சம் அகதிகளும் வசிக்கிறார்கள்......

கேள்வி: எதிர்க்கட்சிகள் தங்கள் கூட்டறிக்கையில் யாழ் குடாநாட்டில் உணவு நெருக்கடி மோசமாகியிருப்பதாக குற்றஞ்சாட்டி உள்ளன அது சரியானதா?

மொரிஸ்: யாழ். மாவட்டத்தில் உணவு நெருக்கடி மோசமானதாக உள்ளது மருத்துவ வசதிகள் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நெருக்கடியைத் தீர்க்க 10 ஆயிரம் மெட்ரிக் தொன் உணவுப் பொருட்களை விமானமூலம் அங்கு போடவேண்டும் என்றுஎதிர்க் கட்சிகள் கோரியுள்ளன. இந்தளவு தொகை உணவுப் பொருட்களை உடனடியாக விமான மூலம் யாழ் குடாநாட்டில் போடக் கூடிய வசதிகள் அரசிடம் உள்ளனவா என்பது கேள்விக்குறி. இராணுவ நடவடிக்கைகளுக்கு விமானங்களைப் பாவிக்கும் அதே தருணம் இது சாத்தியமானதா என்பதும் சந்தேகத்துக்குரியதே.

### குழந்தைகளுக்கு வயிற்றோட்டம்

குழந்தைகள் வயிற்றோட்ட நோயினால் உயிரிழந்து வருகிறார்கள். உணவின்றிக் குழந்தைகள் பட்டினி கிடப்பதைப் பொறுக்க முடியாத பெற்றோர் சிலர் குழந்தைகளுக்கு நஞ்சைக் கொடுக்கிறார்கள் என்றும் செய்திகள் வந்துள்ளன.

பல வட்டாரங்களில் இருந்தும் இத்தகவல்கள் எனக்குக் கிடைத்தன.

உணவு நெருக்கடி நிலைமையைச் சீராக்க கொழும்பில் உள்ள அரசு நிவாரணப் பிரிவு இதய சுத்தியுடன் பணிபுரிவதாக நான் நினைக்கின்றேன்.

கப்பல்கள் மூலம் உணவுப் பொருள்களை அனுப்ப முயற்சிக்கப்படுவதாகச் செய்திகள் கூறுகின்றன.

ஆனால் வடபகுதியில் உள்ளவர்கள் 'அரசு திட்டமிட்டு பொருளாதாரத்தடை விதித்துள்ளது' என்று குற்றஞ்சாட்டுகிறார்கள்.

கேள்வி; தரையில் நல்லாக வேரூன்றியுள்ள விடுதலைப் புலிகள் இயக்கத்தினரை தரையில் வைத்து வெற்றி காணமுடியாது என்ற காரணத்தால் விமானத்தாக்குதல்கள் மூலம்தான் வெற்றி காணலாம் என்று இலங்கை அரசு நம்பியுள்ளதா?

மொரிஸ்: விடுதலைப்புலிகள் தரையில் நன்றாக நிலைகொண்டிருக்கிறார்கள் என்பது உண்மை.

விமானத் தாக்குதல் மூலம் தனது எண்ணத்தை நிறைவேற்றலாம் என்று அரசு நினைக்கிறது போலும்.

விவாதத்தின் இன்னொரு பக்கமாக யாழ்ப்பாணத்தைப் பலாத்காரமாகப் பிடித்து பலாத்காரமாக ஆளுவோம்—' என்று கூறப்படுகிறது.

இந்த உணர்வை எதிர்க் கட்சிகள் கண்டிக்கின்றன.

நீண்ட காலப் பயணத்தில், விமானக்குண்டு வீச்சுத்தாக்குதல் நடத்துவது, நினைத்ததற்கு எதிர் மாறான (Counter Productive) பலனைத் தான் தரும் என்று எதிர்க் கட்சிகள் கூறுகின்றன.

ஆனால் — '' தமிழருக்கு இப்போது வழங்குவதற்கு ஒன்றுமே இல்லை; சூட்டுக்குச் சூடு (Fire for fire) பதிலாகக் கொடுப்பதைத் தவிர' — என்று அரசாங்கத் தரப்பில் பெரும்பாலானவர்கள் கருதுவதாக மிதவாதத் தமிழ் பிரமுகர் ஒருவர் என்னிடம் சொன்னார்- [இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாருக்கு வாரம் 2 நாட்கள் மின்சாரமும் குடிதண்ணீரும்

யாழ்ப்பாணம், ஆக. 28

மன்னார் மாவட்டத்தில் உள்ள மக்களுக்கு வாரத்தில் இரண்டு நாட்கள் மின்சாரமும், குடிதண்ணீரும் கிடைக்க உள்ளன.

கடந்த இரண்டு மாதங்களாக டீசல் இல்லாத காரணத்தால் மன்னார் மாவட்டத்துக்கு மின்சாரமும், குடி தண்ணீரும் வழங்க முடியாதிருந்தது.

மன்னார் அரச அதிபர் திரு. ஏ. சி. செயநாயகம் கொழும்பு அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டதன் பயனாக வாரத்தில் இரண்டு நாட்களுக்கு ஜெனரேட்டர் இயக்கத்தக்க டீசலை வழங்க படையினர் ஒப்புக்கொண்டனர்.

நாளை மறுதினம் முதல் இந்த நடைமுறை அமுலுக்கு வரும் என்று அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

(இ - 3)

## நிறைமாதக் கர்ப்பிணி மரணம்

யாழ்ப்பாணம், ஆக. 28

வேலணையில் இடம்பெற்ற பொம்மர் தாக்குதலில் காயம் அடைந்து மானிப்பாயில் உள்ள யாழ். போதனா வைத்தியசாலைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்த நிறைமாதக் கர்ப்பிணி ஒருவர் ஞாயிறு இரவு மரணமானார்.

இறந்தவர் த. பவானி: வயது 25. கடந்த சனிக்கிழமை இவர் காயம் அடைந்தார். (இ - 113)

## ஏறாவூர் ஆஸ்பத்திரி

கொழும்பு, ஆக. 28

ஏறாவூர் ஆஸ்பத்திரியை மீண்டும் இயங்கச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் டாக்டர் ஒருவரை அங்கு நியமிக்கவும் சுகாதார அமைச்சர் நடவடிக்கை எடுத்திருக்கிறார்.

வன்செயல்களைத் தொடர்ந்து ஏறாவூர் ஆஸ்பத்திரி மூடப்பட்டது தெரிந்ததே.

(இ-எ)

## பிரங்கி வேட்டினால் காயம்

ஞாயிறு இரவு மண்டைதீவு கடற்பகுதியில் இருந்து ஏவப்பட்ட பீரங்கியினால் மணியந்தோட்டத்தைச் சேர்ந்த ஐ. கொன்ரன்ரைன் (வயது 30) என்பவர் காயம் அடைந்தார். (இ-113)

பருத்தித்துறைக்கடலில்

## கடற்படைப் பீரங்கி கப்பல் தாக்கி இருவர் மரணம்

பருத்தித்துறை, ஆக. 28

பருத்தித்துறையிலிருந்து வள்ளங்கள் மூலம் இந்தியா சென்ற அகதிகளை கடற்படை பீரங்கிக் கப்பல் ஒன்று கலைத்துச் சுட்டது.

இந்தச் சம்பவத்தில் திருகோணமலையைச் சேர்ந்த நித்தி (36 வயது) என்பவர் மரணம் அடைந்தார். அவருடன் கூடச் சென்ற மற்றும் ஒருவர் கால்களில் கடும்காயம் அடைந்து பின்பு மரணமானார்.

மானிப்பாயில் உள்ள யாழ். போதனா வைத்தியசாலைப் பிரிவுக்கு இவரை அம்புலன்ஸ் வாகனம் மூலம் அனுப்பும் முயற்சி, வல்லைவெளியில் ஹெலிகள் சுற்றியதால் உடனடியாக சாத்தியப்படவில்லை.

இந்த வள்ளங்களில் பயணம் செய்த பலர் கடற்படையினரால் தாக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்டுகிறது.

(இ-118)

## மோட்டார் சைக்கிள் திருட்டு இரு இலங்கைத்தமிழர் கைது

சென்னை, ஆக. 27

மோட்டார் சைக்கிள்கள் திருட்டுத் தொடர்பாக இரண்டு இலங்கைத் தமிழர்களை சென்னை நகரப் பொலீஸார் கடந்த வாரம் கைது செய்தனர்.

களவு போனதாகக் கூறப்படும் பதினான்கு மோட்டார் சைக்கிள்களை பொலீஸார் கைப்பற்றி உள்ளனர்.

கைப்பற்றப்பட்ட மோட்டார் சைக்கிள்களில் ஹொண்டா, சுஸுகி, பஜாஜ், கவசாகி ஆகியன இருந்தன.

அண்ணாநகர் கோபுரம் அருகே கத்தி முனையில் வழிப்பறி செய்ய முயன்ற போது இந்த இரண்டு இலங்கைத் தமிழர்களையும் பொது மக்கள் பிடித்தனர்.

அவர்களை, அவர்கள் வைத்திருந்த மோட்டார் சைக்கிளுடன் அண்ணாநகர் பொலீஸில் பொது மக்கள் ஒப்படைத்தனர்.

இதனை அடுத்தே மோட்டார் சைக்கிள் திருட்டுகள் அம்பலமாகின.

எஸ். குணராஜா பட்டு இக்பால் [26-வயது], ஆர். நித்தியானந்தம் [27-வயது] ஆகியோரே கைதான இலங்கைத் தமிழர்கள் ஆவர்.

(இ-எ)

## ஆஸ்பத்திரி ஊழியர்கள் இனி பீதி அடையத் தேவை இல்லை

யாழ்ப்பாணம், ஆக. 28

மானிப்பாயில் இயங்கும் யாழ். போதனா வைத்தியசாலைப்பிரிவின் பாதுகாப்புக்குச் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு உத்தரவாதம் அளித்திருப்பதால் வைத்தியசாலை ஊழியர்கள் அச்சமின்றி இனிமேல் கடமைக்கு வரலாம்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஊரடங்கு அமுல் செய்யப்படுவதாலும், மற்றும் வாகன வசதி இன்மையாலும் கடமைக்கு வரமுடியாதவர்களை அவர்களது வீடுகளுக்குச் சென்று செஞ்சிலுவைச் சங்க வாகனங்களில் ஏற்றி வருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

(இ - 5)

## மீண்டும் இடம்பெயர்வு

பச்சிலைப்பள்ளி, ஆக 28

திருமலையிலிருந்து இடம் பெயர்ந்துவந்து தாளையடி செம்பியன்பற்றுப் பகுதிகளில் தங்கியிருந்த இருபதுக்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் மீண்டும் இடம்பெயர்ந்து கொடிகாமம் வந்துள்ளனர்.

கடலிலிருந்து மேற் கொள்ளப்படும் பீரங்கித் தாக்குதலே இதற்குக் காரணமாகும். (இ-117)

## இராணுவத்தினர் சுட்டதில் காயம்

யாழ்ப்பாணம், ஆக. 28

கடைக்கு பொருள்கள் வாங்கச் சென்ற ஒருவர் இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்தார்.

கடந்த வியாழக்கிழமை செட்டிகுளத்தில் நடந்த இச் சம்பவத்தில் இ. இராஜலிங்கம் (வயது 38) என்பவரே காயமடைந்தார்.

(ஒ-5)

## உப்புக் கூட்டுத்தாபன ஊழியர் முற்பணம்

யாழ்ப்பாணம், ஆக. 28

வடபிராந்திய உப்புக் கூட்டுத்தாபன ஊழியர்களின் சம்பள முற்பணத்தை நாட்டின் தற்போதைய நிலைமை காரணமாக முன்பு குறிக்கப்பட்ட இடங்களில் வழங்க முடியாதிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விவரங்களை வட பிராந்திய முகாமையாளருடனோ, அல்லது கணக்காளருடனோ, தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளுமாறு உதவி உற்பத்தி முகாமையாளரால் கோரப்பட்டுள்ளது. (இ)

இலங்கைத் தமிழர் விவகாரம்:

## கனடா அகதிகள் ஆணைக்குழு உண்மை நிலையை அறிந்தது

யாழ்ப்பாணம், ஆக. 28

இலங்கைத் தமிழர்களின் உண்மை நிலை பற்றி கனடா அகதிகள் ஆணைக்குழு அங்கத்தவர்கள் அங்கு சென்ற யாழ். மெதடிஸ்த திருச்சபையின் முகாமைக்குரு வண. கே. பி. கோவிந்தராஜிடம் கேட்டறிந்தனர்.

கனடா சென்றிருந்த குருவானவரைச் சந்தித்த அந்த ஆணைக் குழுவைச் சேர்ந்த பத்து உறுப்பினர்கள், தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இராணுவ நடவடிக்கை குறித்து கேட்டறிந்தனர்.

அங்கு சென்றுள்ள தமிழர்களுக்கு நிரந்தர விசா வழங்குவது சம்பந்தமான விசாரணைகளை இந்தக் குழுவே மேற்கொண்டு வருகிறது.

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து அறிய கனடாவில் உள்ளவர்கள் ஆர்வமாக இருந்ததை அவதானிக்க முடிந்ததாகவும் குருவானவர் தெரிவித்தார்.

(இ-3-5)

## மரண ஊர்வலத்தை நோக்கி ஹெலியிலிருந்து தாக்கு

வல்வெட்டித்துறை, ஆக. 28

மரண ஊர்வலத்தை நோக்கி ஹெலியில் இருந்து வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. மரண ஊர்வலத்தினர் சந்தைக் கட்டடத்தில் தஞ்சம் அடையநேரிட்டது.

கடந்த வியாழக்கிழமை வல்வெட்டித்துறை சந்திக்குச் சமீபமாக இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

வியாழக்கிழமை பரவலாக இடம் பெற்ற இந்த ஹெலித் தாக்குதல்களில் பருத்தித்துறை, திக்கம், அல்வாய், வதிரி. கரவெட்டி, கரணவாய், இமையாணன், உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை, தொண்டமானாறு, பொலிகண்டி ஆகிய பகுதிகளில் வீட்டுக் கூரைகள் சேதம் அடைந்தன. (இ - 160)

## ஊழியர் இன்றி நெருக்கடி

யாழ்ப்பாணம், ஆக. 28

தற்போதைய யுத்த நிலை காரணமாக நகர, கிராமாட்சி மன்றங்கள் பலவித நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றன.

ஊழியர்கள் பலரும் பாதுகாப்புக் கருதி இந்தியா சென்றுள்ளதால் சுகாதாரமும், நகர சுத்திகரிப்பு ஆகிய துறைகள் ஸ்தம்பிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. (இ-160)

## மூவர் காயம்

பச்சிலைப்பள்ளி, ஆக. 28

கடந்த வியாழக்கிழமை ஆனையிறவு கொம்படி வெளியில் இடம்பெற்ற ஹெலித் தாக்குதலில் மூவர் பலத்த காயங்களுக்குள்ளாகி பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

கிளிநொச்சி நாலாம் வாய்க்காலைச் சேர்ந்த ரீ. இராசையா(வயது 51)கே. மாணிக்கம் (வயது 34) உ. செல்வராசா (வயது 31) ஆகியோரே காயம் அடைந்தவர்கள் ஆவர்.

இவர்களை மந்திகை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் வான் தாக்குதல்கள் காரணமாகப் பளை வைத்தியசாலையிலேயே சிகிச்சை அளிக்கப்படுகிறது. (இ - 117)

## போராளி வீரமரணம்

யாழ்ப்பாணம், ஆக. 28

காங்கேசன்துறை இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான இளம்புலி மயூரன் (சிவலிங்கம் மயூரன் - அலுக்கை அளவெட்டி) வீரமரணமடைந்தார். (ஒ-5)

# பாடசாலைகள், ஆலயங்கள் ஊர்காவற்றுறையில் சேதம்

யாழ்ப்பாணம், ஆக. 28

ஊர்காவற்றுறை பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் அரசதிணைக்களக் கட்டடங்கள், பாடசாலைகள், ஆலயங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன.

கடந்த புதன்கிழமை முதல் ஊர்காவற்றுறையில் இருந்து அல்லைப்பிட்டி வரை இடம் பெற்றவிமான ஹெலி, இராணுவத் தாக்குதல் சம்பந்தமாக மேலும் பல தகவல்கள் நேற்று அங்கிருந்து வந்தவர்கள் மூலம் அறியவந்தது.

### அரசகட்டடம் சேதம்

வேலணை உப - அலுவலக கட்டடம் முற்றாகத் தகர்க்கப்பட்டது. வேலணை உதவி அரசாங்க அதிபர் செயலகம் வேலணை ப.நோ.கூ. சங்க கட்டடம், வேலணை சரஸ்வதி பாடசாலை உட்பட பல கட்டடங்கள் சேதமடைந்துள்ளன.

### ஆலயம் சேதம்

வேலணை சிற்பனை முருகமூர்த்தி ஆலயம், வெள்ளைக் கடற்கரை பள்ளிவாசல், அல்லைப்பிட்டி ஆந்தோனியார் ஆலயம் உட்பட பல வணக்கஸ்தலங்கள் சேதமடைந்தன.

### ஏராளமானவர் பலி

நாரந்தனை மணியகாரர் வீதிப் பகுதியைச் சேர்ந்த 30 பேர் கொல்லப்பட்டதாகவும்—

சரவணை வடக்கு பகுதியில் 25 பேரும் பலியாகினர்.

மண்கும்பான் பகுதியில் எரிந்த நிலையில் வைக்கோல் பட்டறையில் இருவரின் சடலங்களும்—

அந்தப் பகுதியில் மற்றும் இருவரின் சடலங்களும் பள்ளப்புலம் பகுதியில் 20 பேரின் சடலங்களும்—கண்டு பிடிக்கப்பட்டு இனத்தவர்களால் அந்த இடங்களிலேயே அடக்கம் செய்யப்பட்டன என்று வந்தவர்கள் தெரிவித்தனர்.

### வாகனங்கள் எரிப்பு

இராணுவம் வந்த பாதைகளில் நின்ற தனியாருக்குச் சொந்தமான வாகனங்கள் கார், லொறி, டிராக்டர் என்பன படையினரால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. வரும் வழியில் உள்ள கடைகளும் தீக்கிரையாக்கப்பட்டன.

அங்கு கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் பங்கர்களில் தஞ்சமடைந்திருந்தவர்களே என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(இ-118)

## மருதடி முருகையன் ஆலயம் குண்டு வீச்சில் சேதம்

பருத்தித்துறை, ஆக. 28

கடந்த வெள்ளிக்கிழமை பருத்தித்துறையில் இடம் பெற்ற குண்டு வீச்சில் மருதடி முருகையன் ஆலயம் சிறிது சேதமுற்றது.

இரண்டு பொம்மர்கள் தாக்குதலில் ஈடுபட்டன.

மரக்கறிச் சந்தைக்கு அருகில் நடத்தப்பட்ட குண்டு வீச்சில் இரு கடைகள் சேதம் அடைந்தன.

புலோலிப் பகுதியில் வீதியால் சென்ற மினிவான் ஒன்றைத் துரத்தியும் பொம்மர் றொக்கட் தாக்குதல் நடத்தியது. இத்தாக்குதலில் வான் சிறிது சேதமடைந்தது.

(இ - 118)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பீரங்கிக் குண்டுகளினால் யாழ். நகரம் அதிர்ந்தது!

## கண்டபடி ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 28

கொழும்புத்துறை மற்றும் அல்லைப்பிட்டி கடற்பகுதியில் நிலை கொண்டிருந்த கடற்படையினரின் பீரங்கிக் கப்பல்களில் இருந்து நேற்று முழுவதும் நடத்தப்பட்ட பீரங்கி, மற்றும் ஷெல் குண்டுத் தாக்குதல்களினால் யாழ் நகரம் அதிர்ந்தது.

மக்கள் நெருக்கமாக வாழும் குடியிருப்புப் பகுதிகள் மீது கண்டபடி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

மக்களைப் பீதியடையச் செய்யும் விதத்தில் குண்டுகள் அடுத்தடுத்து ஏவிவிடப்பட்டன. அவை பெரும் அதிர்வுடன் விழுந்து வெடித்தன.

காலையில் பாஷையூர், குருநகர், மற்றும் யாழ் கோட்டையை அண்டிய பகுதிகளில் விழுந்து வெடித்த இக்குண்டுகள், மாலையில் நல்லூர்ப் பகுதியை – மக்கள் நெருக்கமாக வாழும் இடங்கள்வரை – சென்று விழுந்து வெடித்தன.

பல வீடுகள், கட்டடங்கள் சேதமுற்றன.

மக்கள் பதுங்கு குழிகளில் இருந்ததால் அதிக இழப்பின்றித் தப்பிக்கொண்டனர்.

இந்தத்தாக்குதல்களை அடுத்து நகரை அண்டிய பகுதிகளில் இருந்த மக்கள் நகருக்குச் சற்று அப்பால் உள்ள இடங்களுக்கு இடம்பெயர்ந்தனர்.

யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகில் கஸ்தூரியார் வீதியில் விழுந்த ஷெல்லுக்கு மணிக்கூடு திருத்துபவரான சின்னத்துரை சதாசிவம் (39 வயது) என்பவர் காயம் அடைந்தார், அவரது வீடும் சேதம் அடைந்தது

மாலையில் ஆறு மணியளவில் ஆரம்பமான தாக்குதல் நள்ளிரவுவரை விட்டுவிட்டு நீடித்தது

மாலையில் பல நூற்றுக் கணக்கில் ஷெல் குண்டுகள் மக்கள் வாழும் பகுதிகளை நோக்கி அடுத்தடுத்து ஏவி விடப்பட்டன.

இவற்றினால் ஏற்பட்ட சேதங்கள்பற்றி முழுவிபரங்களும் தெரியவரவில்லை [இ]

## வெற்றிகரத் தாக்குதல்களை புரிந்தவர் மேஜர் செல்வராஜா

யாழ்ப்பாணம், ஆக. 28

பலாலியில் நேற்று வீரமரணமடைந்த மேஜர் செல்வராஜா [அன்பு] இந்திய இராணுவத்துடனான மோதல் ஆரம்பித்து ஒரு மாத காலத்தில் யாழ் மாவட்டத்தில் வெற்றிகரமான பல தாக்குதல்களை தலைமை வகித்து நடத்தியவர்.

— விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் இத் தகவலை வெளியிட்டன.

கொக்குவில் குளப்பிட்டியில் இடம் பெற்ற நேரடி மோதல் ஒன்றில் 12 இந்திய இராணுவத்தினரைக் கொன்று அவர்களது ஆயுதங்களையும் உடல்களையும் அவர் கைப்பற்றினார்.

இந்திய அரசு வீரசர்க்கார் பட்டமளித்த மேஜர் பரமேஸ்வரனும் அவருடன் வேறு 16 ஜவான்களும் இணுவிலில் கொல்லப்பட்ட தாக்குதல் சம்பவத்துக்கு இவரே தலைமை வகித்தார்.

1983 ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகளுடன் இணைந்து கொண்ட இவர் பயிற்சி முகாம்கள் பலவற்றைத் திறம்பட நடத்தி ஆயிரத்துக்கும் மேற்பட்ட போராளிகளுக்கு பயிற்சியளித்தார்.

மக்களாலும், போராளிகளினாலும் பெரிதும் மதிக்கப்பட்டவர் இவர்.

—இவ்வாறு விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் மேலும் தகவல் வெளியிட்டன.

மேஜர் செல்வராஜாவின் புகழுடம்பு இன்று காலை மல்லாகத்தில் உள்ள அவரது வீட்டில் வைக்கப்பட்டு, மக்கள் அஞ்சலிக்காக நண்பகல் 12 மணிக்கு அருணோதயா கல்லூரிக்கு எடுத்துச் செல்லப்படும். தகனக் கிரியைகள் மாலை 5 மணிக்கு மல்லாகம் இந்து மயானத்தில் நடைபெறும். [உ]

## 35 தமிழ் அரச ஊழியர் கைதாகினர்

யாழ்ப்பாணம், ஆக. 28

திருகோணமலை, பச்சைநூலில் நேற்று தமிழ் அரச ஊழியர்கள் 35 பேர் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

சம்பளம் பெற்றுக்கொள்ள அகதி முகாம் ஒன்றுக்கு அழைக்கப்பட்ட அரச ஊழியர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## வதந்தி ஏற்படுத்திய பீதி; மக்கள் இடம் பெயர்ந்தனர்

யாழ்ப்பாணம், ஆக. 28

அராலித்துறையில் ஞாயிறு நள்ளிரவு வேளை ஹெலி "பரா" வெளிச்சம் பாய்ச்சி வட்டமிடவே, அந்தக் கிராம மக்கள் இரவோடிரவாகக் குழந்தை குட்டிகளைத் தூக்கிக் கொண்டு வட்டுக்கோட்டை, சங்கரத்தைப் பகுதிகளுக்கு இடம் பெயர்ந்தனர். அராலித் துறையில் இராணுவம் தரையிறங்கிவிட்டதாகவதந்தி பரவிஇருந்தது.

இராணுவம் தரையிறங்கவில்லை என்பதை அதிகாலையில் கேள்விப்பட்டு மீண்டும் அவர்கள் இருப்பிடம் திரும்பினார்கள். (இ 3)

### மானிப்பாய் செல்வதற்கு

## ஆஸ்பத்திரி ஊழியருக்கு செஞ்சிலுவை வாகன வசதி

யாழ்ப்பாணம், ஆக. 28

மானிப்பாயில் இயங்கும் யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர்களை கடமைக்குப் பாதுகாப்பாக அழைத்துச் செல்வதற்கு செஞ்சிலுவைச் சங்கம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

இதன்படி தினமும் காலை 8 மணிக்கு கச்சேரியடி, கண்டி வீதியிலுள்ள செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை அலுவலகத்திலும் — காலை 8-10 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்பாகவும் செஞ்சிலுவைக் கொடியுடன் கூடிய வாகனம் மூலம் ஊழியர்கள் அழைத்துச் செல்லப்படுவர் என்று செஞ்சிலுவைச் சங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஊழியரின் வரவுக் குறைவால் வைத்தியசாலை சேவைகள் பெரிதும் பாதிப்படைந்திருப்பது தெரிந்ததே. (ஒ-5)

# அரசியல் தீர்வுதான் ஒரேவழி! நெருக்கடிக்கு அரசே காரணம்

## சிறிமாவோ கூறுகிறார்

கொழும்பு, ஆக. 28

இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியில் தீர்வு காண முடியாது; அரசியல் தீர்வுதான் காணவேண்டும்.

சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கொழும்பில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் மீண்டும் இவ்வாறு வலியுறுத்தினார்.

அரசியல்தீர்வுஒன்றைக்காணுவதற்காக தமிழ்க் குழுக்களுடன் பேச்சு நடத்தத் தயாராக இருப்பதாகவும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா சொன்னார்.

இன்றைய நெருக்கடிக்கு இலங்கை அரசே காரணம் என்றும் திருமதி பண்டாரநாயக்கா சொன்னார் (உ-எ)

## 5 ஜே.வி.பியினரும் பிக்குவும் பலி

கொழும்பு, ஆக 28

மத்திய மாகாணத்திலும் தென்மாகாணத்திலும் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையில் 5 ஜே. வி. பி. சந்தேக நபர்கள் கொல்லப்பட்டனர் என்றும் –

ஜே. வி. பியினரால் ஒரு பௌத்த பிக்கு கொல்லப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. [ஒ-எ]

### மக்களை. . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொழுதும் அதேநிலை. சிலர் அவை வரிசையாக கோடடித்ததுபோலப்பறந்துவந்ததை அழகான காட்சியாகவும் பார்த்து ரசித்தது உண்டு.

மூன்றாவது தடவையாக கூட்டமாக வந்த பொம்மர்களுக்கு இடைபேயான இடைவெளி அதிகரித்து அவை விரிந்து பரவத் தொடங்கின.

அதைக் கண்ட மக்கள் தாக்குதல் தொடங்கலாம் என்று முன்னெச்சரிக்கையாக பதுங்கு குழிகளைநோக்கி ஓடி ஒளிக்கத் தொடங்கினர்.

எதிர்பார்த்தபடியேமூன்றாவது "ரவுண்டில்" எட்டு பொம்மர்களில் அனேகமானவை அடுத்தடுத்து தாக்குதலை நடத்தின.

கலிபர், ரொக்கட் குண்டுத் தாக்குதல்களை ஒரே தடவையில்நடத்திக் கொண்டு அவை நகரை விட்டுச் சென்றன.

இதேவேளை, பொம்மர்கள் பவனி வந்தபோது, 4 ஹெலிகள் கடற்கரைப் பக்கமாகச் சுற்றின. ஒரு சீப்பிளேனும் உறுமல் சத்தத்துடன் சுற்றிக் கொண்டிருந்தது.

இவற்றின் வானப் பவனி. பெரியதாக்குதல் ஒன்றுக்கான ஒத்திகையோ என்றும் நகர மக்கள்அச்சம் கொண்டதும் உண்டு. (ஒ)

### பலாலியில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

துடன் போரிட்டு முறியடித்ததாகவும்–

விடுதலைப்புலிகளின் பொறிவெடிகளில் சிக்கி ஐந்து இராணுவத்தினர் கால்களை இழந்ததாகவும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதலின்போது விடுதலைப் புலிகள் தரப்பில் மேஜர் செல்வராஜா மாஸ்டர் (சின்னத்துரை செல்வராஜா - காங்கேசன்துறை), பெண்புலி இரண்டாவது லெப்ரினன்ட் எலிசெபத் [குடத்தனை] ஆகிய இருவரும் வீரமணமடைந்தனர்.

நேற்றைய தாக்குதலின்போது, காலை ஆறுமணி தொடக்கம் கட்டுவன், வீமன்காமம், மயிலிட்டிப் பகுதிகளில் பொம்மர்கள் குண்டுகளை வீசின. ஹெலியிலிருந்தும் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

அந்தப் பகுதிகளில் இருந்த மக்கள் ஏற்கனவே இடம் பெயர்ந்திருந்ததால் உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட்டன.

வீமன்காமம் வறுத்தலைவிளான் பகுதிகளில் ஐந்துக்கும் மேற்பட்ட வீடுகளும், கட்டுவனில் சில பெரிய வீடுகளும் சேதமடைந்தன. (இ-68)

### ராணுவ...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தெரிவித்தார்.

பெருமளவு பொதுமக்கள் வாழும் பகுதிகள் மீது கண்மூடித்தனமாகத் தாக்குதல்கள் நடத்தியிருப்பதாகச் செய்திகள் கிடைத்திருக்கின்றன.

அகதிகளுக்குப் புகலிடம் வழங்கும் விடயத்தில் தமிழக அரசினரும் மக்களும் பாராட்டத்தக்க விதத்தில் பணிபுரிந்திருக்கின்றனர்.

அகதிகள் இந்தியாவுக்குவருவதைத் தவிர்க்க இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் — இவ்வாறு திரு. வி. பி. சிங் அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்திருக்கிறார். (உ)

### மண்டைதீவு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திற்குக் காலம் வந்த ஆக்கிரமிப்பாளர்கள் யாழ். கோட்டையைத் தமது கொத்தளமாகப் பயன்படுத்தியே எமது மக்களை அடக்கி ஆண்டு வந்தனர்.

இக்கோட்டையானது ஆக்கிரமிப்பின் சின்னம். இக்கோட்டை எம்மால் வெற்றி கொள்ளப்பட்டு, தகர்க்கப்படும் வரை எமது முயற்சிகள் ஓயாது.

மண்டைதீவு மோதலில் வீரமரணமடைந்த போராளிகள் விவரம்:

சுபாஸ், வேல்ராஜ், நிதர்சன், முத்துராமன், கருணா, ஜக்ஸன், ஜொனி, மகிந்தன், கிருபா, சக்கரவர்த்தி

ராஜீவ், சசி, குட்டி, ராம்ஜி, குணம், மைந்தன், உதயவர்மன், உதயகுமார், ரமேஷ், குருநாதி.

கபில், சுவர்ணன் ராஜேஸ், சதீஸ், நிலக்ஸன், ரகுவரன், ரெஜினோல்ட், சியாம், சண்முகம், ரவிசங்கர்.

சின்னப்பதாஸ், ஈஸ்வரன், எட்ரிக், கங்கா, மணியரசன், விஸ்வநாத், நந்தன், குமார், இன்பன், ராஜ்.

பானு, பைரவன், கேதீஸ், முரளி, பரணி, ஜிம்கெலி, உதயன், மனோகரன், பிரபா.

இவர்களுக்கு எமது வீர வணக்கங்கள்.

– இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ]

## மரண அறிவித்தல்

### சரவணமுத்து கனகரத்தினம்

(இரத்தினம்)

இளைப்பாறிய M. E S பகுதி பரிசோதகர்
(கொழும்பு மநகரசபை)

சுதுமலை தெற்கு குண்டடியைச் சேர்ந்த சரவணமுத்து கனகரத்தினம் 26 - 08 - 90 ஞாயிறு அன்று இறைபதமடைந்தார்.

இவர் சரவணமுத்து தம்பதிகளின் புதல்வரும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், கனகேஸ்வரன், பகீரதன் ஆகியோரின் அருமைத் தந்தையும், சுலோசனா, ஜெயமணியின் அன்பு மாமனாரும் ஆவார்.

மரணச் சடங்குகள் 26 - 08 - 90 அன்று நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
மனைவி

சுதுமலை தெற்கு. [14105]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம். நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 28-08-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org